ஆணையர் (வணிகவரி)
19 FEB 2021
எழிலகம், சென்னை-600 005

**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – கோவை கோட்டம் – திரு கு. சதீஷ்குமார் என்பவர் கருணையடிப்படையில் 05.02.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

**அரசாணை (டி) எண். 40**

**நாள்: 16.02.2021**
**சார்வரி , மாசி–04,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2052**

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. இணை ஆணையர் (வணிகவரி), கோவை அவர்களின் செயல்முறைகள் எண்.அ5/8361/2019, நாள் 28.01.2020.
4. கூடுதல் ஆணையரின் (நிர்வாகம்), (வணிகவரி ஆணையர் அலுவலகம்) கடித எண். ஒய்3/545494/2020, நாள் 15.12.2020.

*****

**ஆணை:**

வணிகவரித் துறையில் இணை ஆணையர் (வணிகவரி), மண்டலம்–3, கோவை அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்தபோது திருமதி பா.துர்க்காதேவி என்பவர் 25.08.2019 அன்று மரணமடைந்ததால் அவரது கணவர் திரு கு. சதீஷ்குமார் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 13.09.2019 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு கு. சதீஷ்குமார், இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவராக அறியப்பட்டு, மேற்படி கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கோவை கோட்டம், இணை ஆணையர் (வணிகவரி) அவர்களின் செயல்முறைகளின்படி வணிகவரித் துறையின் துணை ஆணையர் (வணிகவரி), சரகம்–3, கோவை அலுவலகத்திற்கு தனியர் ஒதுக்கீடு செய்யப்பட்டு 05.02.2020 முற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு கு. சதீஷ்குமார் என்பவருக்கு, அவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 05.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலகம் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

2. மேற்காணும் கூடுதல் ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில், திரு கு. சதீஷ்குமார், கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, அதாவது, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட

அரசாணையில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. வணிகவரித் துறையில் இணை ஆணையர் (வணிகவரி), மண்டலம்–3, கோவை அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்தபோது 25.08.2019 அன்று பணியிடை மரணமடைந்த திருமதி பா.துர்க்காதேவி என்பவரது கணவர் திரு கு. சதீஷ்குமார் என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், துணை ஆணையர் (வணிகவரி), சரகம்–3, கோவை அலுவலகத்தில், அவர் பணியில் சேர்ந்த நாளான 05.02.2020 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.1385/ட்டி1/2021, நாள் 03.02.2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.3475/ஜி1/2021–1, நாள் 08.02.2021 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
திரு கு. சதீஷ்குமார், இளநிலை உதவியாளர்,
துணை ஆணையர் (வணிகவரி), சரகம்–3, கோவை அலுவலகம்,
கோவை கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)

நகல்:
இணை ஆணையர் (வணிகவரி), கோவை கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி–1) துறை, சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை,
சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

Deputy Commissioner (CT)
Zone-III, Coimbatore

பிரிவு அலுவலர்